

தி.மு.க. துணைப்பொதுச் செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களால் சென்னை சி.ஐ.டி.காலனியில் அவர்களது இல்லத்தில் ,தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவர் ஆ.கோபண்ணா முன்னிலையில் முன்னாள் குங்குமம் வார இதழ் வடிவமைப்பாளர் இரா.ஜெயசீலன்,ரமணி தம்பதியரின் மகன் வெஸ்லி பிரபு ,செங்கல்பட்டு மாவட்டம் ப.வேதகிரி ,ஜானகி அவர்களது மகள் வைத்தீஸ்வரி ஆகியோரது திருமணம் 2024 நவம்பர் 24 அன்று நடத்தி வைக்கப்பட்டது, இதில் இரு வீட்டார் உறவினர்கள் நண்பர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உலக மீனவர் தினவிழா பொதுக்கூட்டம் நடந்தது. பொதுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். விழாவில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ், மற்றும் பலரும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பிஷப் நசரேன் சூசை, பாதர் டன்ஸ்டன், நிக்சன் ஆகியோருக்கு மீனவர் அணி மாநில செயலாளர் ஜோசப் ஸ்டாலின் சால்வை அணிவித்தார்.

# மீனவர் நலனில் எப்போதும் உறுதியாக இருப்பவர் நம் முதல்வர்!

## நாகர்கோவில் உலக மீனவர் தின விழாவில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பேச்சு!

*கன்னியாகுமரி, நவ. 25 -*

மீனவர் நலனில் எப்போதும் உறுதியாக இருப்பவர் முதல்வர் தான் அதனை செயல்படுத்தியும் காட்டியுள்ளார் என கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடந்த உலக மீனவர் தின விழாவில் அமைச்சர் ராஜ கண்ணப்பன் தெரிவித்தார்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உலக மீனவர் தினவிழா பொதுக் கூட்டம் நடந்தது. பொதுக் கூட்டத்தில் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் பால் வளத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல் வப் பெருந்தகை ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசுகையில், மீனவ மக்களுக்காக ராம நாதபுரத்தில் வரலாற்று சிறப்புமிக்க மீனவர் மாநாடு நடத்தியவர் முதல் வர் அவர்கள். சென்னை யில் வெள்ளம் வந்த போது ஒரே நாளில் வெள்ளத்தை அகற்றி மின்சாரம் வழங்கி யவர் நமது தளபதியின் ஆட்சி என்பதை நினைவில் கொள்ளுங்கள். மீன்பிடி தடைக்கால நிவாரண நிதியை 5 ஆயிரத்தில் இருந்து 8 ஆயிரமாக உயர்த்தி தந்தவர் முதல்வர் தான். மீனவர் நலனில் எப்போதும் உறுதியாக இருப்பவர் முதல்வர் தான் அதனை செயல்படுத்தியும் காட்டியுள்ளார். ஜாதி மத மின்றி இயங்கும் ஒரு இயக் கமாக திகழும் திராவிட முன்னேற்ற கழகம் தான் தமிழகத்தை ஆள வேண் டும் என்று நிர்ப்பந்தம் உள் ளது. முதல்வர் சிறப்பான திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார். மீனவர் மீது அக்கறை உள்ளவர்கள் என இந்தியாவில் வேண்டு மானால் காங்கிரஸ் கட்சி என கூறலாம். ஆனால் தமி ழகத்தில் திமுக தான் என்ப தனை நீங்கள் உணர வேண்டும் மத்திய அர சோடு இணக்கமாக இருக்க வேண்டும் ஆனால் 1 ரூபாய்க்கு 29 பைசா தரும் மத்திய அரசு நமக்கு வேண் டாம் என்றார்.

விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங் கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை பேசுகையில், பா.ஜ.க. கடல் தாமரை மாநாடு நடத்தி மோடி ஆட்சிக்கு வந்தால், மீனவர் களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது படகுகள் இலங்கை அரசு சிறை பிடிக்கப்படாது. அதையும் மீறி பிடித்தாலே பாதுகாப் புக்கு இந்திய ராணுவம் வந்து நிற்கும் என்றார்கள். ஆனால் 10 ஆண்டுகளாக வாக்குறுதியை காட்டில் பறக்க விட்டு விட்டார்கள். மீனவர் தினம் கொண்டா டும் இந்நாளில் ஒரு பக்கம் கண்ணீரும் கம்பலையு மாக மீனவர்கள் உள்ளார் கள். மீனவர்கள் தான் பூர்வ குடிகள் மண்ணின் மக்கள். மீனவர்களை ஒரளவு தாங்கி பிடிப்பது தமிழகம் தான்.

ஆனால் இது போதாது அதிக பிரதிநிதித்துவம் வேண்டும். மீனவர்கள் விவகாரத்தில் வெளியுறவு கொள்கை தோல்வி அடைந்துள்ளது. தொடர்ந்து தமிழக மீன வர்கள் இலங்கையால் சிறை பிடிக்கப்பட்டு வருகி றது என்றார்.

விழாவில் மாவட்டச் செயலாளர் மேயர் மகேஷ், மீனவர் அணி மாநில செய லாளர் ஜோசப் ஸ்டாலின், பிஷப் நசரேன் சூசை, பாதர் டன்ஸ்டன், நிக்சன், மற்றும் மகேஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பனுக்கு வீர வாள் பரிசாக வழங்கப் பட்டது.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தி.மு.க. இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47–வது பிறந்தநாளை யொட்டி 1 மாத காலம் நடைபெறும் எளியோர் எழுச்சி நாள் விழாவை தொடங்கி வைத்து, ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பி.குணாளன் ஏற்பாட்டில் ஆலந்தூர் நிதி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற மருத்துவ முகாம் – இரத்ததானம் முகாமில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்று இரத்ததானம் வழங்கினார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டி.பி.செந்தில்குமார் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

